# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No.116/2024**

Deposition of Witness of PW6

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | குருநாதன் | Calling | : |
| Father/Husband's Name | : | வைரவேல் | Age | : |
| Village | : | | | : |
| Taluk | : | | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 11th நவம்பர் 2025.

1, 2 ம் எதிரிகள் ஆஜரில் உள்ளார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தாசாங்காட்டுபுதூரில் வசித்து கொண்டு பதிவு செய்யப்பட்ட பொறியாளராக இருந்து வருகிறேன். கடந்த 17.03.2022 ம் தேதி மாலை 4.00 மணிக்கு தீரன்நகர் சாய்பாபா கோவிலில் சாமிகும்பிட்டு விட்டு வெளியில் நின்று கொண்டு நானும், சக்திவேல் மற்றும் முகிலன் ஆகியோர் பேசிக் கொண்டிருந்தோம். சுமார் 80 அடி துூரத்தில் செல்வமணி என்ற அம்மா வடக்கிலிருந்து தெற்கு நோக்கி லட்சுமி நகரிலிருந்து சாய்பாபா கோவிலுக்கு வந்து கொண்டிருந்தார். பச்சை கலர் சட்டை, கருப்பு கலர் சட்டை அணிந்த 2 நபர்கள் செல்வமணி அம்மா வரும் வழியில் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களை தாண்டி தான் செல்வமணி அம்மா வந்தார். மஞ்சள் கலர் டியோ வண்டி TN 69 BU 1300 என்ற பைக்கில் இருந்து பச்சை கலர் சட்டை அணிந்த நபர் இறங்கி வந்து செல்வமணி அம்மாவின் கழுத்தில் இருந்த செயினை பறித்து கொண்டு போகும் போது கருப்பு கலர் சட்டை அணிந்த நபர் அந்த பைக்கிலேயே இருந்தார்.

2. பச்சை கலர் சட்டை போட்ட நபர் பைக்கில் ஏறி சென்றுவிட்டார்கள். அப்போது செல்வமணி அம்மா சத்தம் போட ஆரம்பித்தார்கள். கோவிலில் சத்தம் வந்தபோது நாங்கள் போய் என்ன என்று கேட்டோம். அப்போது செயினை அறுத்து கொண்டு போய்விட்டதாக சொன்னார். நான் ஓடி சென்று அந்த

VIJAYAKUMAR K Digitally signed by VIJAYAKUMAR K Date: 2025.11.11 15:51:10 +0530

வளைவில் பார்த்தேன். அந்த நபர்கள் அங்கு இல்லை. திரும்ப வந்து நானும், சக்திவேலும் பைக்கில் சென்று பார்த்த போது பச்சப்பாளி நால்ரோட்டை தாண்டி சென்றுவிட்டார்கள். பார்க்க முடியவில்லை. திரும்ப வந்து செல்வமணி அம்மா அவர்கள் மகனுக்கு இது சம்பந்தமாக நாங்கள் தகவல் சொன்னேன். அவர் மகன் வந்து செல்வமணி அம்மாவை அழைத்து கொண்டு காவல்நிலையம் சென்று புகார் கொடுப்பதாக சொன்னார். 17.03.2022 அன்று இரவு காவல்நிலையம் சென்று செல்வமணி மகன் புகார் கொடுத்ததாக சொன்னார்கள். 18.03.2022 ம் தேதி இந்த வழக்கு சம்பந்தமாக என்னை அழைத்து போலீஸார் விசாரித்தார்கள்.

3. அப்போது போலீஸார் விசாரணையில் பச்சை மற்றும் கருப்பு கலர் சட்டை அணிந்த நபர்கள் மஞ்சள் கலர் டியோ வாகனத்தில் வந்து செயினை பறித்து சென்றதது சம்பந்தமாக சொன்னேன். 29.03.2022 ம் தேதி மீண்டும் என்னை போலீஸார் காவல்நிலையத்திற்கு அழைத்தார்கள். மேலும், செல்வமணி அம்மாவிடம் செயினை பறித்து சென்ற நபர்களையும், வண்டியையும் பிடித்து வைத்துள்ளதாகவும் அடையாளம் காட்டுமாறும் சொன்னார்கள். மேலும் நான் காவல் நிலையம் சென்று அங்கிருந்த வண்டியை பார்த்து அடையாளம் காட்டி மேலும் பைக்கை ஓட்டி சென்ற கருப்புகலர் சட்டை அணிந்தவரை அடையாளம் காட்டினேன். பின்னிட்டு 20.09.2022 ம் தேதி மீண்டும் என்னை போலீஸார் காவல்நிலையம் அழைத்தார்கள்.

4. அப்போது பாரதி செல்வம் என்ற ஒரு நபரை காட்டி மேற்படி நபர் தான் செயினை பறித்தவரா என என்னிடம் காட்டி உறுதி படுத்திக் கொண்டார்கள். நானும் அடையாளம் காட்டினேன். மேற்படி நான் காவல்நிலையத்தில் இந்த வழக்கு சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களை அடையாளம் காட்டியது ஆஜர் எதிரிகள் தான் ஆவார்கள். இவர்களை நான் காவல்நிலையத்தில் வைத்து போலீஸார் எனக்கு அடையாளம் காட்டினார்கள். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள சிகப்பு கலர் சட்டை போட்ட நபர் சம்பவ சமயத்தில் பச்சை கலர் சட்டை அணிந்திருந்தார். அவர் தான் பைக்கில் இருந்து இறங்கி வந்து செயினை பறித்தவர் ஆவார். மற்றொரு எதிரான இன்று ஆஜராகி இருக்கும் வெளிர்பச்சை நிற ஆடை அணிந்த நபர் தான் சம்பவ சமயத்தில் கருப்பு கலர் சட்டை அணிந்து பைக்கை ஓட்டிய நபர் ஆவார். இன்று எதிரிகள் வந்த பைக் தான் சம்பவத்தின் போது எதிரிகள் ஓட்டி வந்தது ஆகும். அது ஏற்கனவே அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.11.11 15:51:19 +0530

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் அ.சா.1 செல்வமணியை வழக்கிற்கு முன்பு எத்தனை முறை பார்த்துள்ளேன் என்றால் பார்த்ததில்லை. எனது முதல் விசாரணை போலீஸார் வாக்குமூலத்தில் அ.சா.1 ஐ கோவிலில் வைத்து பலமுறை பார்த்ததாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். வழிப்பறி நடந்ததாக சொல்லும் பகுதியானது வளைவானது என்றால் சரிதான். செல்வமணியின் கழுத்தில் இருந்து தங்க செயினை பறிக்கும் போது நேரடியாக பார்க்கவில்லை என்றால் பார்த்தேன். நான் பார்த்த கோவில் நான்கு புறமும் சுவர் இருக்கும் என்றால் மூன்று புறமும் சுவர், ஒருபுறம் கடை இருக்கும். வழக்கு சம்பவ சமயத்தில் நான் கோவிலில் உள்ளே இருந்ததாக குறிப்பிட்டிருந்தால் தவறு என்றால் தவறு தான்.

2. எதிரிகள் ஒட்டி வந்த வாகனத்தின் பதிவு எண்ணை எனது 18.03.2022 போலீஸ் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நானும், என்னுடன் வந்தவரும் எதிரிகளை எவ்வளவு துாரம் துரத்தி கொண்டு சென்றோம் என்றால் பச்சப்பாளி நால்ரோடு வரை சென்றோம். நான் காவல்துறையில் கொடுத்த வாக்குமூலத்தில் நான் ஓட்டியதாகவும் சாட்சிகள் ஓட்டியதாக எந்தவொரு வாகனத்தையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வைத்து நான் எதிரிகளை அடையாளம் காட்டியதாகவும், சம்பவ இடத்தில் போலீஸார் எதிரிகளை கைது செய்ததாக எனது வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. முதன் முறையாக நான் எதிரிகளை காவல்நிலையத்தில் வைத்து தான் அடையாளம் காட்டினேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும், அரசுதரப்பில் கேட்டுக்கொண்டதற்காக அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சாய்பாபா கோவிலில் இருந்து பச்சப்பாளி நால்ரோடு வருவதற்கு குறைந்தது 1 கிலோமீட்டர் தொலைவு இருக்கும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.11.11 15:51:28 +0530